# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**


**சுற்றறிக்கை எண் 18/2014** **நாள் : 13/08/2014**

**பெறுநர்**
மாநில நிர்வாகிகள்
கிளைச் செயலாளர்கள்

அன்பார்ந்த தோழரே,

வணக்கம்,

சிஐடியு மாநில நிர்வாகிகள் கூட்ட முடிவின் அடிப்படையில் வெண்மணி நினைவாலய திறப்பு விழா மார்ச்-9 அன்று நடைபெற்றிருந்தாலும் வெண்மணி கட்டுமான பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது எனவே அப்பணிகளை முழுமையாக நிறைவு செய்திட தேவைப்படும் நிதியையும், கட்டுமான பணிக்கு தேவைப்படும் இரும்பை சேகரிக்கும் பணியையும் ஒவ்வொரு மாவட்டமும் திட்டமிட்டு வெகுஜன அரங்கங்களின் ஆதரவோடு அப்பணிகளை இந்த மாத இறுதிக்குள் முடிக்க வேண்டும் என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

நிதிவசூலை பொறுத்த வரையில் அமைப்பு சார்ந்த நம் போன்ற சங்கங்களில் உறுப்பினருக்கு தலா ரூ. 50/- என்ற அடிப்படையில் நமது நிரந்தர உறுப்பினர்கள் மத்தியில் அதாவது கிளைகளின் நிரந்தர உறுப்பினர் எண்ணிக்கைக்கு ஏற்ப வசூலிக்கும் தொகையினை நமது மாநில மைய்யத்தின் மூலம் சிஐடியு மாநில மைய்யத்திற்கு செலுத்திட வேண்டியுள்ளது.

மாநில மையத்திலிருந்து கிளைகளுக்கு தேவைப்படும் நிதி வசூலுக்கான புத்தகங்கள் இச்சுற்றறிக்கையுடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ளது. கிளைகள் உடனடியாக இந்த நிதி வசூலில் கவனம் செலுத்தி **நமது நிரந்தர உறுப்பினரிடம் தலா ரூ. 50/- என்ற அடிப்படையில் வசூலித்து அத்தொகையினை மாநில மைய்யத்திற்கு அடுத்த மாதம் (செப்டம்பர் 2014) 15ந் தேதிக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

கட்டிடப் பணிக்கு தேவைப்படும் இரும்பு சேகரிக்கும் பணிகளையும் கிளைகள் மாவட்ட மையத்துடன் இணைந்து இரும்பு சேகரித்து அந்தந்த மாவட்ட மையத்தில் சேர்க்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்